விலை: சதம் 75

மலிவு விற்பனை
எம்மிடம்
நல்லஇன முந்திரிகை கன்றுகளும் நல்ல இன தென்னங்கன்றுகளும் விற்பனைக்கு உண்டு.
தொடர்பு கொள்ளவும்.
அண்ணா பாம்
புகையிரத வீதி,
இணுவில்.

ஈழநாடு
THE EELANADU

மலர் 23 ஆவணி 14 ஷவ்வா 29 இதழ் 197
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 30-8-1981

மில்க்வைற்
ஆதரவாளர்களுக்கு
ஓர் அன்பான வேண்டுகோள்
எமது மில்க்வைற் நீலசோப் மேலுறைகளை போன்ற அமைப்பில் வேறு சில தயாரிப்புகளும் விற்பனைச் சந்தையில் இருக்கின்றபடியால் போலி மேலுறைகளைத் தயவுசெய்து கவனித்து உண்மையை அறிந்து எங்கள் தயாரிப்புக்களைக் கவனித்துப் பார்த்து வாங்குங்கள்.
மில்க்வைற்
யாழ்ப்பாணம்.

★ இ. தொ. காங்கிரஸ்தேசியசபை கோருகிறது:

# இந்திய வம்சாவழி மக்களுக்கு அரசு பாதுகாப்பு வேண்டும்!

## விரும்புவோர் இந்தியா மீள உடனடியாக வழிசெய்க

(நமது சிறப்பு நிருபர்)

"அண்மையில் நிகழ்ந்த வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட இந்திய வம்சாவழி மக்களுக்கு அரசாங்கம் உடனடிநிவாரணம் வழங்க வேண்டும். அவர்கள் நாட்டில் எப்பகுதியி[illegible]ந்தாலும் அவர்களுக்கு அரசாங்கம் உரிய பாதுகாப்பு அளிக்கவேண்டும். இதனுடன் இந்திய வம்சாவழி மக்களுக்கு நாம் தொழிற்சங்க ரீதியாக மேற்கொள்ளவிருக்கும் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு அரசு அங்கீகாரம் வழங்க வேண்டும்''

இவ்வாறு இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் அரசாங்கத்தைக் கோரியுள்ளது.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உயர்பீடமான தேசிய சபையின் அவசர கூட்டம் நேற்று காங்கிரஸின் தலைமை அலுவலகத்தில் நடைபெற்றது.

தேசிய சபையின் அவசர கூட்டத்தில் அண்மையில் நிகழ்ந்த வன்செயல்களினால் இந்திய வம்சாவழி மக்கள் பாதிக்கப்பட்டது குறித்து விரிவாக ஆராயப்பட்டது. இந்திய வம்சாவழிமக்கள் மீது தாக்குதல்கள் அடிக்கடி நிகழ்கிறது என்றும் இந்தாக்குதல்கள் இம்முறை உச்சக்கட்டத்தில் நடைபெற்றிருக்கின்றன என்றும் சுட்டிக்காட்டிய உறுப்பினர்கள், பாதுகாப்பு, பந்தோபஸ்து பொறுப்பில் இருந்தவர்கள் தாக்குதலைக் கட்டுப்படுத்த உடன் நடவடிக்கைகள் எடுக்கத் தவறிவிட்டார்கள் என்பதை இந்திய வம்சாவழி மக்கள் நன்குணர்ந்துள்ளனர் என்றும் கருத்து வெளியிட்டனர்.

காடையர்கள் சுதந்திரமாகத் திரிவதை அனுமதிப்பது இவர்கள் எவ்விதத் தண்டனைக்கும் அப்பாற்பட்டவர்கள் என்பதையே சுட்டிக்காட்டுகிறது என்றும் அங்கத்தவர்களால் தெரிவிக்கப்பட்டது.

### கோரிக்கை

தேசிய சபையின் அவசர கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டு அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்படவுள்ள சில கோரிக்கைகள் வருமாறு:

"நாடற்றவர்கள் பிரச்னை உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டும்!

"இலங்கைப் பிரஜாவுரிமை கோரி விண்ணப்பித்தவர்களுக்கு உடன் பிரஜா உரிமை வழங்கவேண்டும்.

''இலங்கை வம்சாவழியினர் விரும்பிய இடத்தில் குடியேறும் வரையில் அவர்களுக்குச் சந்தர்ப்பமளிக்க ஒப்பந்தம் வகை செய்யப்படவேண்டும்.

பாதிக்கப்பட்ட இந்திய வம்சாவழி மக்கள் அனைவருக்கும் அவர்கள் கோரும் நஷ்ட ஈடு தொகையின் அடிப்படையில் நஷ்டஈடு வழங்கப்படவேண்டும்.

"பாதிக்கப்பட்ட அவர்களது குடியிருப்புகள் உடன் திருத்திக் கொடுக்க வேண்டும்.

''திரும்பிச் செல்ல முடியாதவர்களுக்கு அவர்களது தொழில் வீட்டு வசதிகளுக்கு நிவாரணம் வழங்கவேண்டும்.

1977-ல் பாதிக்கப்பட்டவர்களுக்கு குடும்பமொன்றுக்கு ரூ. 500 நிவாரண நிதி வழங்கப்பட்டது. இத்தொகை அதிகரிக்கப்பட்டு உடன் வழங்கப்படவேண்டும்.

"இந்திய கடவுச்சீட்டு

[6ம் பக்கம் பார்க்க]

## விக்கிரமசிங்கா காலமானர்!

[மாஸ்கோ]



இலங்கை கம்யூனிஸ்ட்கட்சித் தலைவரும் சிரேஷ்ட அரசியல்வாதியும் முன்னாள் எம். பியுமான டாக்டர் எஸ். ஏ. விக்கிரமசிங்கா மாஸ்கோவில் நேற்று காலமானர்.

1931ம் ஆண்டு இலங்கைச் சட்டசபைக்கு மொறட்டுவைத் தொகுதியிலிருந்து தெரிவு செய்யப்பட்டு இவர் அரசியலில் பிரவேசிக்கலானர்.

டாக்டர்விக்கிரமசிங்கா 1901 ஏப்ரல் 13ந் திகதி அம்பரஸ்ஸப் பிரதேசத்திலுள்ள அத்துரலிய என்னும் கிராமத்தில் பிறந்தார்.

கிராமப்பாடசாலைக் கல்வியின் பின்னர் இவர் காலி மஹிந்த கல்லூரியிலும் கொழும்பு ஆனந்தக் கல்லூரியிலும் உயர் கல்வி பெற்று. இங்கிலாந்து சென்று வைத்திய கலாநிதிப் பட்டம் பெற்றார்.

திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் துர்மதி வருடம் ஆவணித் திங்கள் 18-ம் நாள் [3-9-81] வியாழக்கிழமை பகல் 9-05 — 10-30 வரையும் உள்ள துலாலக்கின சுபயோக சுபமுகூர்த்தத்தில்

எமது புதல்வன்
திருநிறை செல்வன்
பாலசிங்கம்
பி. எஸ் சி.
அவர்களுக்கும்

எமது புத்திரி
திருநிறை செல்வி
சாந்தினி
அவர்களுக்கும்

நல்லை ஞானசம்பந்தர் ஆதீனத்தில் நிகழும் இத்திருமண வைபவத்தில் தாங்கள் தங்கள் சுற்றம் சூழ வருகை தந்து மணமக்களை ஆசீர்வதித்தேகுமாறு அன்புடன் அழைக்கின்றோம்,

தங்கள் நல்வரவை நாடும்

திரு. திருமதி
வல்லிபுரம்
உரிமையாளர்,
ஈஸ்வரன் படமாளிகை,
டி-5, பரந்தன்.

திரு. திருமதி
சிவகுருநாதன்
102, அம்பலவாணர் வீதி,
அத்தியடி,
யாழ்ப்பாணம்.

0729

திருமண அழைப்பு

அன்புடையீர்,

நிகழும் துர்மதி வருடம் ஆவணித் திங்கள் 15-ம் நாள் [31-8-81] காலை 9-15 மணி முதல் 11-15 மணி வரையுமுள்ள சுபமுகூர்த்தத்தில்

எமது புதல்வன்
திருநிறை செல்வன்
சிவசூரியா
[பொறியியலாளர் யு. கே.]
அவர்களுக்கும்

எமது புத்திரி
திருநிறை செல்வி
ராஜேஸ்வரி
அவர்களுக்கும்

வட்டுக்கோட்டை உடுக்கியவளைப் பிள்ளையார் கோவிலில் நிகழும் இத்திருமண வைபவத்தில் தாங்கள் வருகை தந்து மணமக்களை ஆசீர்வதிக்கும்படி அன்புடன் அழைக்கிறோம்.

தனிப்பட்ட அழைப்பிதழ்கள் இல்லை.

வரவேற்புபசாரம்
மணமகன் இல்லத்தில்
செவ்வாய்க்கிழமை 1-9-81 மாலை 5 மணிக்கு நடைபெறும்.

இங்ஙனம், தங்கள் நல்வரவை நாடும்

திரு.சு. இராஜாவும் பாரியாரும்
கட்டுடை,
மானிப்பாய்.

திரு.செ. தம்பிரட்ணமும் பாரியாரும்
வட்டு மேற்கு,
வட்டுக்கோட்டை.

0786

## உலகுக்கு நிரந்தரமாக

# அமைதி அளிக்கவல்ல 'முதலாளித்துவ குண்டு!

தலைப்பைக் கண்டதும், உலகம் முதலாளித்துவ முகாம்- சோசலிச முகாம் என்று கூறு பட்டிருப்பது போன்று, குண்டு களையும் 'முதலாளித்துவ' குண்டுகள், 'சோசலிச' குண்டு கள் என வகைப்படுத்தலாமா இது மிக வேடிக்கையாக இருக் கின்றதே என சிலர் நினைக்க லாம்.

நான் 'முதலாளித்துவ'க் குண்டு எனக் குறிப்பிடுவது "நியுட்ரன்" குண்டையே. அதன் 'சிறப்பு' என்னவென் ருல் ஆட்களைக் கொல்லும்: ஆனல் கட்டிடங்களைப் பெரும் பாலும் சேதப்படுத்தாது. சாதாரண அணுக்குண்டு உயி ரினங்களையும் சடப் பொருட் களையும் அழிக்கின்றது.

"நல்ல" முதலாளிகளும் 'கெட்ட' சோசலிசவாதிகளும் இருக்கின்றனர் என்பதை நானும் அறிவேன். இங்கு தனிப்பட்டவர்களின் பண்போ பண்பின்மையோ அல்ல பிரச்னை ஒரு குறிப்பிட்ட சமூக அமைப்பின் தன்மையைத்தான் நாம் கணக்கில் எடுக்கவேண் டுமேயொழிய தனிப்பட்டவர் களின் குண இயல்புகளை அல்ல.

இந்தவகையாக நோக்குகை யில், முதலாளித்துவம் மக்க ளின் நலனை அல்ல, இலாபத் தையே- ஆதாயத்தையே குறிக் கோளாகக் கொண்டிருக்கின் றது. ஆட்கள் நசுக்கிப் பிழியப் பட்டு சக்கையானல் அதற்கு என்ன செய்வது? 'பொருள் இல்லார்க்கு இவ்வுலகு இல்லை" என்பதை முதலாளித்துவம் நன்கு அறிந்துவைத்திருக்கின் றது.

மனிதர்களின் உயிர்களைப் பொருட்படுத்தாது உடைமை கள் மீதும் சடப்பொருட்களின் மீதும் இவ்வளவு 'கரிசனை" கொண்டிருக்கும் 'நியுட்ரன்' குண்டை 'முதலாளித்துவ'க் குண்டு என வர்ணிப்பது மிகவும் பொருத்தம்தானே?

நிற்க, வளர்முக நாடுகள் எவ்வாறு பொருளாதாரத் துறையில் மேற்கு நாடுகளை அண்டி வாழவேண்டியுள் ளதோ, அதேபோன்று செய்தி, தகவல்துறையைப் பொறுத்த வரையும் மேற்கு நாட்டு செய்தி 'ஏஜென்சி'களைத்தான் நம்பியி ருக்கின்றன; அவற்றில்தான் தங்கியுள்ளன இந்த "ஏஜென் சிகள்' "டெலிபிரின்டரில்' அனுப்பும் செய்திகளை அப்ப டியே நமது "தேசிய'ப் பத்திரி கைகள் வாந்திஎடுக்கின்றன. நாம் அரசியல் சுதந்திரம் பெற் றும் இன்றும் இந்த அவல நிலை நீடிக்கின்றதென்றல், ஏஜென் சிகளின் ,கொடுங்கோன்மை' யைப்பற்றி மேலும் எதுவும்கூற வேண்டியதில்லை. இந்தப் பின் னணியில்தான் 'புதிய தகவல் அமைப்பு' ஒன்று உருவாக்கப் படவேண்டும்; இன்றுபோல் அது ஒரு வழிப்பாதையாக இருத்தலாகாது என மூன்றும் உலக நாடுகள் குரல் எழுப்பி யுள்ளன. ஆனல் இன்றுவரை

### 'வெளியான்'

இது வெறும் கோஷமாகவே இருந்துவருகின்றது.

இவற்றையெல்லாம் நான் இங்கு குறிப்பிடுவதற்குக் கார ணம் உண்டு. அண்மையில் இந்த ஏஜென்சிகளால் அனுப் பப்பட்ட செய்திகளின்படி ரஷ்யா 'நியுட்ரன்' குண்டைத் தயாரித்து பரிசோதித்துவிட்ட தாம். அமெரிக்க 'வாத்தி யார்' ஜனதிபதி றேகன் இந் நிலையில் பாராமுகமாக இருப் பாரா? இக்குண்டு உற்பத்தியை முழு அளவில் நடத்துவதற் கான உத்தரவை அவர் பிறப் பித்துவிட்டார். செய்தியை இவ்வாறு வழங்கும்போது சாதாரண வாசகனின் மன தில் என்ன எண்ணம் தோன் றும்? படுபாவி ரஷ்யர்களின் பயங்கர சூழ்ச்சிகளிலிருந்து அமெரிக்காவைக் காப்பாற்றும் பொருட்டு றேகன் தற்காப்பு நடவடிக்கைகளை எடுக்க வேண்டிய நிலைக்கு தள்ளப் பட்டுள்ளார் என வாசகன் எண்ணுவது இயல்பே.

ஆனல் உண்மை என்ன?

1978-ம் ஆண்டிலேயே அப் பொழுது ஜனதிபதியாக இருந்த கார்ட்டர் இக்குண் டைத் தயாரிக்க முடிவெடுத் திருந்தார். ஆனல் அமெரிக்கா விலும் மேற்கு ஐரோப்பாவி லும் தோன்றிய மாபெரும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் விளைவாக அம்முடிவை அவர் மாற்ற வேண்டி நேர்ந்தது.

வார்சோ ஒப்பந்த நாடுகளி டம் மேற்கு ஐரோப்பாவை தாக்கவல்ல 19,500 டாங்கி கள் உண்டாம், "நேட்டோ" விடம் ஆக 7000 டாங்கிகள் மட்டும் தான் இருப்பதால், 'நியுட்ரன்' குண்டே மேற்கு ஐரோப்பாவிற்கு பாதுகாப்பு அளிக்க வல்லது என பெரும் பாலான ஐரோப்பிய இரா ணுவவல்லுனர்கள் கருதுகின் றனர். ஆனல் எல்லோரும் இந்த வாதத்தை ஏற்றுக் கொண்டுள்ளனர் எனச் சொல் வதற்கில்லை.

ஏஜென்சிகள் எமக்கு வழங்கி யுள்ள செய்திகளுக்கு முரணுன வகையில் இன்னுமொரு அமெரிக்க பத்திரிகையான 'கிறிஸ்தியன்' சயன்ஸ் மொனிட்டர்' பின் வருமாறு கூறுகின்றது. [ஆகஸ்ட் 17, 1981] மேற்கு ஐரோப்பாவிற்குத் தேவைப் படுகிற அளவிற்கு மாஸ்கோ வீற்கு 'நியுட்ரன்' குண்டு பயன்படாது. பரிசோதனை ஒன்றை நடாத்திபிருக்கின்றர் கள் எனச் செய்திகள் அடி பட்ட போதிலும் மாஸ்கோ அக்குண்டைத் இன்னும் தயா ரிக்கவுமில்லை வேறு எங்கும் அவற்றை நிலைகொள்ளச் செய் யவுமில்லை.

ரஷ்யா இக்குண்டைத் தயா ரித்துள்ளது என வாதத்திற்கு ஒப்புக்கொண்டாலும் அது தற்பாதுகாப்பு நடவடிக்கை என்பதில் ஐயமில்லை. நியுட் ரன் குண்டை வைத்து அமெ ரிக்கா எல்லோரையும் வெருட் டிக் கொண்டிருக்கும் போது ரஷ்யாவோவேறு எந்த நாடோ சும்மா கைகட்டிக் கொண்டு நிற்கும் என ஓர் மடையன் கூட எதிர்பார்க்கமாட்டான்.

'நியுட்ரன்' குண்டு அணு ஆயுதப் போர் அபாயத்தை மேலும் அதிகரித்துள்ளது என அவதானிகள் சுட்டிக்காட்டு கின்றனர். நாம் இன்று போர் விளிம்பில் நிற்கிறோம் எந்த நேரமும் நாம் தவறி அதன் பாதாளத்திற்குள் விழலாம்.

"நியுட்ரன்' குண்டு உண் மையில் குண்டு அல்ல, அது ஏவுகணையின் முனைப்பகுதி மட்டுமே எனச் சிலர் தர்க்க வாதம் செய்கின்றனர். இத்த கைய வாதம் அமெரிக்காவின் தலைசிறந்த நகைச்சுவைக் கவி ஞரான ஒக்டன் நாஷின் கவிதை ஒன்றை நினைவூட்டு கிறது. சொற்களின் நுணுக்க வேறுபாடுகளில் மிக அக்கறை கொண்டுள்ள ஓர் பேராசிரி யரிடம் சிலர் சென்று 'உமது மனைவியை ஒரு 'குரொக் கோடைல்" [முதலை) விழுங்கி விட்டது'' எனக் கூற பேராசி ரியர் ஒரு புன்சிரிப்புடன் சொல்கிருர் ''அது குரோக் கோடைல்'' அல்ல ஒரு 'அலிக் கேட்டர்' [முதலை இனத் தைச் சேர்ந்தது] தான்''

'நியுட்டரன்' குண்டின் தீவிர கதிரியக்கத்தின் தாக்கு தலால் ஒரு சில விநாடிகளில் அல்லது ஒரு சில மணித்தியா லங்களில் துடிதுடித்து இறப் பவர்களைப் பொறுத்தவரை, அணுகுண்டு என்றல் என்ன, ஏவுகணையின் முனைப்பகுதி என்றல் என்ன, எல்லாம் ஒன்று தான்.

ஆற்றில் விழுந்து இறந்தால் என்ன, கிணற்றில் விழுந்து இறந்தால் என்ன சாவு சாவு தான்.

அமெரிக்க ஏகாதிபத்தியத் திற்கும் ரஷ்ய சமூக ஏகாதி பத்தியத்திற்கும் - சீனவின் வர்ணனை - இடையே ஏற் பட்டுள்ள கெடுபிடியின் விளை வாக இந்த 'மினி' நீரகக் குண்டினுல் விரைவிலே உல கெங்கும் அமைதி நிலவப் போகின்றது - மயான அமைதி.



## இன்று நல்லூர்க் கந்தன் பூங்காவனத் திருவிழா

கைவாய் கதிர்வேல் முருகன் கழல்பெற்
றுய்வாய் மனனே யொழிவா யொழிவாய்
மெய்வாய் விழிநாசியொடுஞ் செவியாம்
ஐவாய் வழி செல்லுமவா வினையே

—கந்தரநுபூதி

## 31-வது வருடாந்த கூட்டம் இன்று

[யாழ்ப்பாணம்]

தெல்லிப்பழை ஐக்கிய வைத்தியசாலைச் சங்கத்தின் 31-வது வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று தெல்லிப் பழை யூனியன் கல்லூரி மண் டபத்தில் முற்பகல் நடை பெறும். [இ]

தொலைபேசி தொடர்புசேவை

## திறமைசாலிகள் வெளியேற்றம் அமைச்சர் கவலை

[கொழும்பு]

தொலைபேசித் தொடர்பு சேவையின், திறமை பெற்ற ஊழியர் பெருமளவில் மத்திய கிழக்கு செல்வதனுல் இச்சேவை கொழும்பின் பிரதான பகுதி களில் சீர்கேடடைந்துள்ள தென தபால் தொலைதொடர் பு அமைச்சர் திரு. டி. பீ. விஜயதுங்கா கவலை தெரிவித் துள்ளார்.

இவ்வூழியர்கள் மிக அனுபவ மும், திறமையும் பெறுவர் களெனவும், இவர்களது வெளி யேற்றத்தினுல் தொலைபேசிக் கம்பி இணைப்புகள், மற்றும் நிலத்திற்கடியினுள் தொலை பேசி இணைப்புக்களின் பழுது கள் என்பன நன்கு சீர்திருத்த முடியாதுள்ளதென அமைச்சர் விளக்கியுள்ளார்.

இந்நிலையினைபடுத்து, அர சாங்கம் அமைச்சரிடம் தற்போ துள்ள வேலையாட்களுக்கு தரமுயர்வுகளை அளித்து, திற மைசாலிகளின் வெளியேற் றத்தை ஈடுசெய்யும்படி வேண் டியுள்ளதாகத் தெரிகிறது.

## செய்தித்தணிக்கை: அமைச்சரின் கருத்து

[கொழும்பு]

இலங்கையிலிருந்து வெளி நாடுகளுக்கு பத்திரிகை நிரு பர்கள் அனுப்பும் செய்திகளை தணிக்கை செய்வதில் எதுவித பயனுமில்லை எனத்தான் அர சாங்கத்துக்கு சுட்டிக் காட்டி யதாக ராஜாங்க அமைச்சர் திரு. ஆனந்த திஸ்ஸ அல்விஸ் நேற்றுமுன் தினம் அறிவித்தார்.

விவசாய ஆராய்ச்சி பயிற்சி நிறுவனத்தின் ஆள்பண் முகாமையாளர் கூட்டம் மொன்றில் பேசுகையிலே அமைச்சர் இத்தகவலை வெளி யிட்டார்.

அவர் தொடர்ந்து கூறிய தாவது:

''அரசாங்கம் விரும்பினுல் என்ன விரும்பாவிட்டால் என்ன செய்திகள் வெளிநாடு களுக்கு அனுப்பப்பட்டவண் ணமே இருக்கும் என நான் அரசாங்கத்திற்குச் சுட்டிக் காட்டினேன். தகவல் தொடர்பு துறையில் 'தலை தெறிக்கும்' வேகத்தில் புரட்சி கரமான மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கையில் தொழில் முகாமை தொழில் நுட்பம் பற்றிய சர்வதேச கருத்துக் கள் எம் காதுகளை எட்டாது தடுக்க முடியாது.''

பத்திரிகை தணிக்கை அமு லில் இருக்கின்ற போதிலும் இத்தணிக்கை இங்கு கடமை யாற்றும் வெளிநாட்டு பத் திரிகை நிருபர்களை கட்டுப் படுத்தாது என அரசாங்கம் சென்றவார முற்பகுதியில் அறிவித்திருந்தது தெரிந்ததே.

## பேச்சு கட்டுரை போட்டிகள்

(யாழ்ப்பாணம்)

திட்ட அமுலாக்கல் அமைச் சின் உணவுப் போஷாக்கு திட்டமிடல் பிரிவு கல்வி அமைச்சின் அனுசரணையுடன் பேச்சுப்போட்டி, கட்டுரைப் போட்டி யொன்றை நடாத்த வுள்ளது.

## ஒரு திருத்தம்

''தீராத பிரச்னைகளுக்கு தீர்வு பேச்சுவார்த்தையே'' என்ற தலைப்பில் நேற்று வெளி யான கட்டுரையில் இறுதிப் பந்தியில் சிறு தவறு ஏற்பட்டு விட்டது.

தமிழர் விடுதலைக்கூட்டணி யுடன் அரசு ஒரு ஒப்பந்தம் செய்துகொண்டாலும் கடந்த கால அனுபவங்களிலிருந்து இதர அரசியல் கட்சிகள் எதிர்ப்புத் தெரிவிக்கக்கூடும். எனவே பேச்சுவார்த்தைகளில் உடன்பாட்டுக்கு வரும் முக்கிய அம்சங்களை சகல அரசியல் கட்சித்தலைவர்களையும் அழைத் துப் பேசி அவர்களையும் அந்த உடன்பாட்டை ஏற்றுக்கொள் ளச்செய்த பின்னர் கூட்டணி யுடன் ஒப்பந்தம்செய்துகொள் வதே விவேகமானதாகும்'' என்று கட்டுரையின் இறுதிப் பகுதி அமையவேண்டும்.

—எஸ்.எம்.ஜி

★ நம்பிக்கை ★ பாதுகாப்பு ★ உத்தரவாதம்

உங்கள் முதலீட்டிற்கு பாதுகாப்பும் ஆகக்கூடுதலான வட்டியும் வழங்கும் நிறுவனம்

முதலிட்ட நாள் தொடக்கம் 30% மாதாந்தம் வட்டி வழங்குகின்றோம்

"மீளப்பெறுதல்"

நீங்கள் விரும்பும் நேரத்தில் வட்டியைப் பாதிக்காத வகையில் மீளப்பெறலாம்!

டிரான்ஸ்லங்கா இன்வெஸ்ற்மென்ட் லிமிட்.

77 1/1, பெரியகடை வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 7027

[மத்திய வங்கி நாணய சபையினரால் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனம்]

[பிரதி சனிக்கிழமையும் பிற்பகல் 4 மணிமுதல் 4-30 மணிவரை

"இரைதேடும் பறவைகள்" என்னும் நாடகத்தைக் கேட்கத் தவறாதீர்கள்]

யாழ். நகரில்

கொழும்பு விலைகளுக்கமைய
இரும்புக்கம்பிகள்,
3/8, 5/8, 1/2"
கூரைத்தகடுகள், நீர்இறைக்கும்
மோட்டர்கள்
பெறுவதற்கு நாடுங்கள்
நேரடி இறக்குமதியாளர்
கதிர் ஹாட்வெயர்ஸ்
11/1-2 மொம்சாக் பில்டிங்
ஸ்ரான்லி வீதி, - யாழ்ப்பாணம்

குருநகரில்

## சிறைமீண்ட இளைஞர் வெட்டிப் படுகொலை!

[யாழ்ப்பாணம்]

அண்மையில் சிறையிலிருந்து வெளிவந்த குருநகரைச்சேர்ந்த ஜேக்கப் ஆனந்தி என்பவர் வெட்டிக் கொலைசெய்யப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் தொடர்பாக அதே இடத்தைச் சேர்ந்த ஜேரோம் என்பவர் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

குருநகர்பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி திரு. ஜே. சிவகுமார் விசாரணையை மேற்கொண்டுள்ளார். [க]

எம்மிடம்......
இறக்குமதிசெய்யப்பட்ட

றெக்சின் குளோத்
பிளாஸ்டிக் குளோத்
(F) போமிக்கா சீற்
பொலித்தீன் வகைகள்
ஒட்டுப்பசை வகைகள்
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெறலாம்.
H. ESMAILJEE & Co
71-73, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். போன்: 8016

# வடக்கில் கப்பல்கட்டும் தளம்!

## அமைச்சுச் செயலாளர் இடத்தைப்பார்வையிடுவார்

[புலோலி]

வல்வெட்டித்துறை நகராளுமன்ற முதல்வரின் முயற்சியினால் தொண்டமானாற்றில் கப்பல்கட்டும் தளமும் பழுதுபார்க்கும் நிலையமும் நிறுவுவதற்கான இடத்தை உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் செயலாளர் திரு. பாஸ்கரலிங்கம் பார்வையிடவுள்ளாரென அறிவிக்கப்பட்டுள்ளது.

தொண்டமானாற்றில் கப்பல் கட்டும் தளமும், பழுதுபார்க்கும் நிலையமும் அமைக்கப்பட வேண்டிய அவசியம் பற்றி வல்வெட்டித்துறை நகராளுமன்ற முதல்வர் திரு. என். ஞானமூர்த்தி தெல்லிப்பளையில் நடைபெற்ற மினிக்கச்சேரியில் பிரதி உள்ளூராட்சி அமைச்சர் திரு. பி. சி. இம்புலானவிடமும் பருத்தித்துறை உதவி அரசாங்க அதிபர் பணிமனையில் நடைபெற்ற மினிக்கச்சேரியில் அப்போதைய யாழ். மாவட்ட அமைச்சின் செயலாளரும், அரசாங்க அதிபருமான திரு யோகேந்திரா துரைசுவாமியிடமும் வலியுறுத்தியிருந்தார்.

தொண்டமானாற்றில் இக்கப்பல் கட்டும் தளத்தையும், பழுதுபார்க்கும் நிலையத்தையும் அமைப்பதற்குத் தெரிவு செய்யப்பட்ட இடத்தை உள்ளூராட்சி வீடமைப்பு நிர்மாணத்துறை அமைச்சின் செயலாளர் திரு. பாஸ்கரலிங்கம் பார்வையிடவுள்ளாரென்றும், இக்கப்பல் கட்டும் தளத் திட்டம் மாவட்ட அபிவிருத்தி சபையின் கீழ் வருவதால் யாழ் மாவட்ட அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. எஸ். நடராசாவுடன் இது பற்றித்தான் தொடர்பு கொண்டுள்ளதாகவும் நகராளுமன்ற முதல்வர் திரு. ஞானமூர்த்தி தெரிவித்தார்.

முன்னைநாள் கப்பல் உரிமையாளர்களான திரு. மு. பொ. வீரவாகு, திரு எஸ். எஸ். இராஜசிங்கம், திரு. வி. வி. இராமசாமிப்பிள்ளை போன்றவர்களிடமும் இக்கப்பல் கட்டும் தளத்தையும், பழுதுபார்க்கும் நிலையத்தையும் அமைப்பதற்கு ஆக்கபூர்வமான ஒத்துழைப்பை வழங்குமாறு அவர் கோரியுள்ளார். [அ]

## கோவில் கிணற்றுக்கு 3 உயிர்கள் பலி!

### குழந்தைகளைப் போட்டு தாயும் தற்கொலை

[மாங்குளம்]

இளம்பெண் ஒருவர் இரு குழந்தைகளைக் கிணற்றில் போட்டு தானும் கிணற்றுக்குள் பலியான சம்பவம் ஒட்டுசுட்டானில் நடந்துள்ளது.

குடும்பத்தகராறே இச்சம்பவத்திற்குக் காரணம் எனக் கூறப்பட்டது.

ஒட்டுசுட்டான் தான்தோன்றி ஈஸ்வரன் கோவில் கிணற்றில் குழந்தைகளை வீசிய தாய் அக்கிணற்றிலேயே தானும் வீழ்ந்து தற்கொலை செய்துகொண்டார்.

மாங்குளம் பொலிஸார் இச்சம்பவம் தொடர்பாக விசாரணையை மேற்கொண்டுள்ளனர். [க-அ]

## இப்படியும் நடக்கிறது

சிகரெட்டுக்கு எப்படி தீ மூட்டுவது?

முருகனுக்கு எல்லையில் காவல் நின்ற சிலர், பக்தர்கள் எரித்த கற்பூரத்தின் ஜுவாலையிலும் புகைத்து மகிழ்ந்தார்களாம்.

ஆமாம், சிகரெட்டை எந்த நெருப்பிலும் இப்படியும் பற்ற வைக்கலாம்.

— ஊடுருவி

## "இந்திராவின் கவனத்திற்கு எடுப்பேன்"

சென்னை, ஆக. 29

இலங்கைத் தமிழ் மக்கள் பிரச்சினையைத் தீர்க்க இலங்கை அரசு உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் தலைவர் திரு சம்பத் தெரிவித்துள்ளார்.

இலங்கைத் தமிழ் மக்களின் பிரச்சினையை இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தியின் கவனத்திற்குத் தாம் கொண்டு வர இருப்பதாகவும் திரு. சம்பத் தெரிவித்துள்ளார். [இ]

## இந்திய...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

[பாஸ்போர்ட்] உள்ளவர்கள் தாயகம் திரும்ப மனுச்செய்தால் உடன் இந்தியாவுக்கு அனுப்பவழி செய்ய வேண்டும்.

இந்திய வம்சாவழி மக்களுக்கு தொழிற்சங்க ரீதியாக நாம் மேற்கொள்ளும் பாதுகாப்பு நடவடிக்கைகளை அரசு அங்கீகரிக்கவேண்டும்.

"வன்செயலின் பின்னணி என்ன? யார்காரணம்? என்பதைக் கண்டறிய நடுநிலையான விசாரணைக்குழு ஒன்றை அரசு நியமிக்கவேண்டும். பொறுப்பானவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படவேண்டும் இதன் மூலம் அந்தவித சிந்தனை உள்ளவர்களுக்கு இத்தண்டனை ஒரு படிப்பினையா இருக்கவேண்டும்.

வன்செயல் சம்பந்தமாகக் கைதாகிப் பலர் விடுதலை செய்யப்படுவதால், அமைதிக்கு பங்கம் ஏற்படுகிறது என்பதையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்" இவ்வாறு இ.தொ. கா தேசியசபை கோரியுள்ளது.

## "சாம்மாஸ்டர் மறைவு பேரிழப்பு!"

### யோகேஸ் அஞ்சலி

[யாழ்ப்பாணம்]

"அறிவுலகுக்கு நேர்ந்த ஒரு பேரிழப்பாக கருதக்கூடிய முறையில் சம். பத்திரிசியார் கல்லூரியின் ஈடிணையற்ற விஞ்ஞான ஆசிரியர் திரு. சாம் அல்பிரெட் திடீரென மறைவுற்ற செய்திகேட்டுபேர் அதிர்ச்சி அடைகிறேன். இரசாயனம் என்றாலே சாம் எனுமளவுக்கு இரசாயனப்பாடத்தின் மாபெரும் வித்தகராகத் திகழ்ந்த அமரரிடம் அறிவுப்பால் பருகியவர்கள் பலருண்டு. அன்னாரின் நெஞ்சத்திலே எரிந்து கொண்டிருந்த தமிழ் உணர்வை அவரிடம் பயின்ற மாணவர்கள் நன்கறிவர். அவர் என் இனிய நண்பர். ஒரு சிறந்த சமூக சேவையாளர். அவரின் மறைவு ஈடு செய்யமுடியாத இழப்பு".

இவ்வாறு யாழ். எம். பி. திரு. வெ. யோகேஸ்வரன் விடுத்துள்ள செய்தியில் அஞ்சலி செலுத்தியுள்ளார்.

## தி. மு. க. வினர் கைது

சென்னை, ஆக. 29

இலங்கையில் நடந்த கலவரங்களுக்கு ஆட்சேபம் தெரிவித்து ஊர்வலம் நடத்த முயன்ற3 தி. மு. க சட்டசபை, மேலவைஉறுப்பினர்களும் 156 தொண்டர்களும் கைது செய்யப்பட்டு 15 நாட்கள் காவலில் வைக்கப்பட்டுள்ளனர்.

முன்னெச்சரிக்கையாக நேற்று முன்தினம் 200 தி. மு. கவினர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

## ரஸிகர்கள் மோதல்

[யாழ்ப்பாணம்]

யாழ்.நகரிலுள்ள சினிமாத் தியேட்டரொன்றில் இரு ரஸிகர்களுக்கிடையே ஏற்பட்ட மோதலில் ஒருவர் படுகாயமடைந்தார்.

## மரண அறிவித்தல்

### சாம் B. R. அல்பிரட்

யாழ்ப்பாணம், 15, கண்டி வீதியைச் சேர்ந்த யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி ஆசிரியரும், றோட்டறிக் கழக உறுப்பினருமான சாம் B R. அல்பிறட் அவர்கள் காலமானார். இவர் மாக்கிறட் இராசவதியின் அன்புக்கணவரும், பிரேமினி (யாழ். பல்கலைக்கழகம், மருத்துவபீடம்), தர்மினி (சென்னை கிறிஸ்தவக் கல்லூரி) சுரேஸ், றூபன் (புனித பத்திரிசியார் கல்லூரி மாணவர்கள்) ஆகியோரின் அருமைத் தந்தையும், திருமதி மேரி திரேசாவின் அன்புச் சகோதரரும், எஸ். வீ. மனுவேற்பிள்ளை (Rtd. D. A. E. O.) திருமதி ஸ்ரெல்லா செல்வநாயகிசுவாம்பிள்ளை, செல்வி செல்வராணி ஆகியோரின் மைத்துனருமாவார்.

இவரின் இறுதிச் சடங்குகள் 31-8-81 திங்கட்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெறும். வழிபாட்டினைத் தொடர்ந்து 3.30 மணிக்கு பூதவுடல் புனித பத்திரிசியார் கல்லூரி சிற்றாலயத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு இறுதி அஞ்சலிக்காக வைக்கப்படும். 4-30 மணிக்குத் திருப்பலியின் பின்னர் புனித மரியன்னை சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

0787

15, கண்டி வீதி
யாழ்ப்பணம்.

## இன்று ஆரம்பம்

[மாவிட்டபுரம்]

பிரசித்திவாய்ந்த கீரிமலை கிருஷ்ணர் ஆலய கும்பாபிஷேக விழாவையொட்டிய கிரியைகள் இன்று ஆரம்பமாகின்றன. அடுத்த மாதம் 3-ந்திகதி கும்பாபிஷேகம் நடைபெறும்.

## மரண அறிவித்தல்

### வஸ்தியாம்பிள்ளை சில்வெஸ்ரர் இம்மானுவல்

உடுவில் அம்பலவாணர் வீதியைச் சேர்ந்த திரு. வஸ்தியாம்பிள்ளை சில்வெஸ்ரர் இம்மானுவேல் காலமானார். இவர் விறிஜெற்றின் அன்புக்கணவரும் யூடிற்றுவின் அருமைத் தந்தையும், காலஞ்சென்ற ராசமணி செபஸ்தியாம்பிள்ளையின் சகோதரரும், காலஞ்சென்ற செபஸ்தியாம்பிள்ளை, காலஞ்சென்ற கிறிஸ்ரீன் அந்தோனிப்பிள்ளை, செபஸ்தியாம்பிள்ளை (ஆசிரியர், ஸ்கந்தவரோதயக்கல்லூரி), புஷ்பம் ஸ்ரனிஸ்லோஸ் ஆகியோரின் மைத்துனரும் ஆவார். அன்னாரின் பூதவுடல் (30-08-81) இன்று ஞாயிற்றுக்கிழமை மாலை 4-00 மணிக்கு மல்வத்தை சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

0788

இப்பத்திரிகையாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்குவீதி, 63-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், காங்கேசன்துறை வீதி, 303ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981 ஓகஸ்ட் 30-ம் திகதி அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post office: Sri Lanka. Regd. Q. B. 100236/81. P. O. Box 49. Jaffna. தொலைபேசி: 7707, 889, 8126;